**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 26/2021**

**2024**ம் வருடம் அக்டோபர் திங்கள் 16ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு.V.மனோஜ்குமார், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர : திருமதி. சித்ராதேவி(CW–1) கிராமம்:
தந்தை / கணவர் பெயர் : தொழில் :
வயது :

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் செங்கப்படை குரூப் கிராம நிர்வாக அலுவலராக கடந்த 3 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து ஆவணங்கள் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை கிடைக்கப்பெற்று வட்டாட்சியரின் உத்தரவின் பேரில் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளேன்.

2. எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் செங்கப்படை குரூப் பாம்புல்நாயக்கன்பட்டி கிராம சர்வே எண்.38/4A ல் கண்ட சொத்து குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டிருந்தது.

3. சர்வே எண்.38/4 ல் கண்ட சொத்தானது 0.27.0 ஏர்ஸ் நிலமானது ரா.பாம்புல்நாயக்கர் என்ற பெயரில் தாக்கலாகி வருகிறது என்பதைக் காட்ட "அ" பதிவேட்டின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன். "அ" பதிவேட்டின் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.1 ஆகும். அதில் நீர்ப்பிடிப்பு என்று நிலமானது வகைப்படுத்தப்பட்டுள்ளது.

4. சர்வே எண்.38 க்கான புலவரைபடத்தின் சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.2 ஆகும்.

5. சர்வே எண்.38/4A க்கான அடங்கல் நீ.ம.சா.ஆ.3 ஆகும். அதில் அதானி கிரீன் எனர்ஜி (தமிழ்நாடு) என்ற பெயரில் தாக்கலாகி வருகிறது. அதில் உளுந்து பயிரிடப்பட்டுள்ளதாக குறிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொத்தமாக 13.5 ஏர்ஸ்–ல் 3.50 ஏர்ஸ்–ல் உளுந்து பயிரிடப்பட்டுள்ளது. மீதமுள்ள இடத்தில்

சிறிய அளவில் கொட்டகை அமைக்கப்பட்டு மற்ற இடங்கள் தரிசு நிலமாக உள்ளது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. தாவா சொத்தின் நான்கு மாலாக வடபுறம் ஊராட்சி துவக்கப்பள்ளி அமைந்துள்ளது. கிழக்கே அய்யரப்பன் என்பவரின் வீடு அமைந்துள்ளது. மேற்கே மலைராஜ், குருசாமி என்பவரின் புஞ்சை நிலம் அமைந்துள்ளது. தெற்கே சிந்தலையன் மற்றும் அனுமந்தக்கிருஷ்ணன் என்பவரது புஞ்சை நிலங்கள் அமைந்துள்ளது.

6. தாவா சொத்திலிருந்து சோலார் பேனல் அமைக்கப்பட்ட இடமானது தென்திசையில் சுமார் 2.5 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. தாவா சொத்தானது கிராமத்திற்குள் அமைந்துள்ளது.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.